செ.வெ.எண்: 12/பிப்ரவரி நாள்: 08.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அலுவலக உதவியாளர் பதவிக்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள இரு அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்பப்படவுள்ளது. இப்பணிக்கு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 01.07.2015 அன்று குறைந்தபட்ச வயது 18 முதல் அதிகபட்ச வயது 35-க்குள் இருக்க வேண்டும். இதர முன்னுரிமை உள்ளவர்களுக்கு அரசு விதிகளின்படி வயது வரம்பில் சலுகை வழங்கப்படும். இனசுழற்சியாக 1) பொது பிரிவில் முன்னுரிமையுள்ளவர்கள் (GT Priority) 2) தாழ்த்தப்பட்ட அருந்ததியர் பெண்கள் பிரிவில் முன்னுரிமையுள்ளவர்கள் (SCA Priority WDW). இப்பணிக்கு பொது பிரிவில் முன்னுரிமையுள்ளவர்கள் (GT Priority) மற்றும் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் பெண்களில் முன்னுரிமையுள்ளவர் பிரிவில் உள்ளோர் (SCA Priority WDW) மட்டும் விண்ணப்பிக்கலாம்.

மேற்காணும் தகுதிகள் பெற்றிருந்தால் அவர்கள் தங்களது பெயர், கல்வித்தகுதி, சாதி விபரம், வீட்டு முகவரி, தொலைபேசி எண் ஆகிய விபரங்களுடன் **25.02.2016**-க்குள் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை தேர்வு குழுவினரால் பரிசீலனை செய்து தகுதியுடையவர்களுக்கு நேர்முக தேர்வுக்கு வருமாறு பின்னர் தெரிவிக்கப்படும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், பரமக்குடி- 623 707, தொலைபேசி எண்: 04564 231300 தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**